
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1226

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

114

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

**தமிழ்நாட்டில் பெண்கள் மீதான குற்றங்களைத் தடுப்பதற்கு, த.வெ.க. அரசு கொண்டு வந்த 'சிங்கப்பெண் திட்டம்'தான் காவல் துறையின் முதல் திட்டம் என்பது போல விளம்பரப்படுத்தப்படுகிறதே?**

தமிழ்நாட்டின் முதல் பெண் அமைச்சரே த.வெ.க.வைச் சேர்ந்த பெண் அமைச்சர்தான் என்று 'ரீல்' ஓட்டியவர்களுக்கு, 'ரியல்' நிலவரம் பற்றி எதுவும் தெரியாது. ஆனால், உண்மை நிலவரங்களுக்கும் த.வெ.க.வின் விளம்பரங்களுக்கும் வெகுதூரம். இது வரலாறு அறிந்தவர்களுக்குத் தெரியும். வரலாற்றை ஒவ்வொரு தலைமுறைக்கும் திரும்பத்திரும்ப நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால், விளம்பரப்பொய்களே உண்மை என்றாகிவிடும்.

காவல் துறையில் முதன்முதலில் பெண்களை நியமித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவர் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, 1973–ஆம் ஆண்டு, காவல் துறையில் ஆண்களைப்போல பெண்களும் செயல்பட வேண்டும் என்கிற தந்தை



### காவல் துறையில் பெண்களும்... கழக அரசின் சாதனைகளும்!

பெரியாரின் கனவை நிறைவேற்றும் வகையில், மகளிர் காவலர்களை நியமித்தார். முதல் பெண் காவலரான சிசிலி என்பவர், பின்னர் சப்-இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வு பெற்று, பணி ஓய்வு பெற்றவர். 'மகளிர் காவலர் பட்டாலியன்'களை கலைஞர் அரசு உருவாக்கியது. 'திராவிட மாடல் நாயகர் ஆட்சி'யில் நடைபெற்ற காவல் துறையில் பெண்கள் சேர்க்கப்பட்டதன் ஐம்பதாவது ஆண்டு விழாவிலும் கலந்துகொண்ட சிசிலி அவர்கள், அண்மையில்தான் காலமானார். கலைஞர் ஆட்சியின் அடித்தளத்தில்தான், ஜெயலலிதா அவர்களின் ஆட்சியில் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்', 'பெண் காவலர் கமாண்டோ படை' ஆகியவை உருவாக்கப்பட்டன.

தமிழ்நாட்டின் முதல் பெண் டி.ஜி.பி.யாக 2010-ஆம் ஆண்டில் லத்திகா சரண் ஐ.பி.எஸ்ஸை நியமித்தவரும் கலைஞர்தான். இது தமிழ்நாட்டில் முதல்முறை. இந்திய அளவில் ஒரு பெண் ஐ.பி.எஸ். அதிகாரி மாநில காவல் துறையின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டது இது இரண்டாவது முறையாகும். பெண்களுக்குக் காவல் துறையில் உரிய இடம் கொடுத்தது மட்டுமன்றி, பெண்கள் பாதுகாப்புக்காக காலத்திற்கேற்ற சட்டங்களை நிறைவேற்றியதும் கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சிதான். சென்னை எத்திராஜ் கல்லூரியைச் சேர்ந்த மாணவி சரிகா ஷா என்பவர் கல்லூரி அருகே பேருந்து நிலையத்தில் தன் தோழிகளுடன் காத்திருந்தபோது, ஒரு சில இளைஞர்கள் அவரிடம் 'வன்பகடி' (ஈவ் டீசிங்) செய்து தாக்கியதில், அவர் கீழே விழுந்து, தலையில் அடிபட்டு, சிகிச்சை பலனின்றி இறந்தார்.

கல்லூரிகளிலும் பிற இடங்களிலும் இதுபோல பெண்களை 'வன்பகடி' செய்வது தடுக்கப்படவும், 'வன்பகடி' செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கிடவும், 1998-ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அரசின் 'ஈவ் டீசிங் தடுப்புச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. பேருந்து நிறுத்தம் போன்ற இடங்களில், பெண்களை 'வன்பகடி' செய்யும் கூட்டத்தைக் கண்டறியவும் பெண் போலீஸ் படை அமைக்கப்பட்டது.

கலைஞர் ஆட்சி போலவே 'திராவிட நாயகர் ஆட்சி'யிலும் பெண் காவலர்கள் நலனில் அக்கறை செலுத்தப்பட்டது. பெண் காவலர்களைப் பந்தோபஸ்து பணியில் ஈடுபடுத்தக் கூடாது என்ற தளர்வு அளிக்கப் பட்டது. பெண் காவலர்கள் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டு, 'பிங்க் பேட்ரோல்' எனும் பெண்கள் பாதுகாப்புக்கான 'ரோந்துப் படை' உருவாக்கப்பட்டது. பாலியல் குற்றங்களைத் தடுக்க, சிறப்புச் சட்டங்கள் கொண்டுவரப் பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டன. காவல் துறையில் 'ட்ரோன்' மூலம் கண்காணித்து குற்றச்செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 'சிங்கப் பெண்' என்பது, மேற்சொன்ன கழக அரசுகள் உருவாக்கிய கட்டமைப்பின் மீதான ஸ்டிக்கர்தான்.

...வினா தொடரும்.

### பிரச்சாரத்தில் பாய்ந்துவிட்டு, இப்போது பதுங்கலாமா?

'சிங்கப்பெண் அதிரடிப்படை' திட்டத் தொடக்க விழாவில் முதலமைச்சர் விஜய் பேசியதைக் கேட்டதும், பிரச்சாரத்தின்போது ஸ்கிரிப்ட்டை வைத்து சீறிப்பாய்ந்துவிட்டு, பதவியேற்ற பின்பு படுகுழியில் பதுங்கிக்கொள்ள நினைக்கலாமா சி.எம். ப்ரோ எனப் பலரும் கேள்விகளை எழுப்பிவருகின்றனர். அந்த முரண்பாட்டைப் பார்க்கலாம்.

**விஜய் பேச்சு :** பெண்களுக்கு எதிரான பிரச்சினைகள் பல ஆண்டுகளாக உள்ளன. இப்போது புதிதாக உருவாகவில்லை.

**மக்கள் கேள்வி :** த.வெ.க. ஆட்சியமைத்த ஒரே மாதத்தில், 50-க்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுமைகள் உட்பட பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடந்திருக்கின்றன. அரசு நிர்வாகம் தறிகெட்டு இருக்கிறது என்பது உண்மைதானே?

**விஜய் பேச்சு :** போதைப்பொருள்கள் நடமாட்டமும் பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு முக்கியக் காரணம்.

**மக்கள் கேள்வி :** சேலம் மாவட்டம், சங்ககிரியில் 12.5 கிலோ கஞ்சா கடத்திய வழக்கில், 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதில் பூபதிராஜா என்பவர் த.வெ.க. நிர்வாகியாச்சே?

**விஜய் பேச்சு :** பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய, தனிமனித ஒழுக்கமும் முக்கியமானது.

**மக்கள் கேள்வி :** தி.மு.க. ஆட்சியின்போது இந்த வாய் இப்படிப் பேசவில்லையே! ஆட்சியாளர்களை நோக்கித்தானே ஆவேசமாக ஸ்கிரிப்ட்டை படித்தீர்?

**விஜய் பேச்சு :** பெண்கள், பயம் இல்லாமல் வாழ வேண்டுமென்பதே குறிக்கோள்.

**மக்கள் கேள்வி :** ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ.வுக்கு நெருக்கமான த.வெ.க.வினர் இருவர் சொந்தக் கட்சியைச் சேர்ந்த இளம்பெண்ணையே குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து கூட்டுப்பாலியல் வன்கொடுமை செய்திருக்கிறார்களே? கடைசியில், அந்தப் பெண்ணைத்தானே கட்சியை விட்டு நீக்கினீர்கள்? குற்றவாளிகளுக்கு ஏற்பட்டிருக்கவேண்டிய பயத்தை, அந்த இளம்பெண்ணுக்குக் கொடுத்தது நியாயம்தானா?

**விஜய் பேச்சு :** பெண்களுக்கான மரியாதையும் கண்ணியமும்தான் அரசின் இலக்கு.

**மக்கள் கேள்வி :** கோவையில் பாலியல் வன்கொடுமை செய்யப் பட்டு கொலை செய்யப்பட்ட 10 வயது குழந்தையின் தாய், குடிபோதையில் இருந்தார், அதனால்தான் குழந்தையைக் கடத்திச்சென்று வன்கொடுமை செய்தனர் என 'த.வெ.க. விர்ச்சுவல் வாரியர்ஸ்' கூசாமல் அவதூறு பரப்பினார்களே? அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மக்களின் கேள்விக் கணைகள் உயரத் தொடங்கிவிட்டன. ரீல்ஸ் அரசுக்கு இவையெல்லாம் உறைக்குமா?




## ஃப்ளாஷ்பேக்



முகவை ஜெ.அண்ணாதுரை



### வாழ்நாளில் மறக்க முடியாத நாள்!

2015-ஆம் ஆண்டு அக்டோபர் 15-ஆம் தேதி, எனது 46-வது பிறந்தநாளை முன்னிட்டு, என் உயிரனைய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து, பிறந்தநாள் வாழ்த்துப் பெற்றேன். அந்த ஆண்டு பிறந்தநாள், என் வாழ்நாளில் மறக்கமுடியாத தருணத்தை வழங்கியது.

**– முகவை ஜெ.அண்ணாதுரை,**
**மாவட்டப் பிரதிநிதி, திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி,**
**சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பொதுவாழ்வில் கலக்கம் கூடாது!

1968-ஆம் ஆண்டில், சென்னை 9-வது வட்டக் கழகத்தின் சார்பில், மாவீரன் சௌந்தரபாண்டியன் பெயரில் படிப்பகத்தைத் திறந்துவைத்து உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. கழகத்தினரின் பொதுத்தொண்டு குறித்துக் கூறுகையில், "பொதுவாழ்வு, பஜனை மடத்தை விட மிகவும் கஷ்டமானது. பொறுப்பு வாய்ந்தது. பொது வாழ்வில் ஈடுபட்ட எவரும் புகழப்படுவதைப் போல் பன்மடங்கு தூற்றப்படுவார்கள். அந்தத் தூற்றலைக் கண்டு துக்கப்படவோ, கஷ்டப்பட்டு கலங்கவோ கூடாது. அப்படிப்பட்டவர் பொதுவாழ்விற்குப் புறம்பானவர்" என்று குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900